அசல் வழக்கு எண். 62/2022

நாள் :28.11.2024

வா.சா. : 1

பெயர் : பக்கிரிசாமி

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மருத்துவராக இருக்கிறேன் என்றால் நாட்டு வைத்தியர். நான் Diploma in mechanical engineering படித்திருக்கிறேன். 2ம் பிரதிவாதியின் கணவர் ராஜமாணிக்கம் என் உடன்பிறந்த அண்ணன். ராஜமாணிக்கம் OS 160/2009 என்ற வழக்கை சீர்காழி முன்சிப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அந்த வழக்கில் என்னை பிரதிவாதியாக சேர்க்க சொல்லி சீர்காழி முன்சிப் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டதன்பேரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP. PD No. 3063/2016 in IA 773/2012 in OS 160/2009 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரி. அந்த Crp லிருந்து ராஜமாணிக்கத்திற்கு **சார்வு செய்யப்பட்ட மனுநகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரி. அது பிவாசா 1** ஆகும். 2ம் வாதி அழகுமதி ராஜமாணிக்கத்தின் முதல் மனைவி என்றால் அவருக்கு ஒரு மனைவி தான் அவர்தான் அழகுமதி. அழகுமதியை ராஜமாணிக்கம் நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து செய்து விட்டார் என்றாலும் அதை என்னால் மறுக்க முடியுமா என்றால் அது போல் விவாகரத்து செய்யவில்லை. ராஜமாணிக்கத்தின் இரண்டாம் மனைவி ஜோதி என்றாலும் அதை நான் மறுக்க முடியுமா என்றால் அதை நான் மறுக்கிறேன். 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் பாரா 3ல் ராஜமாணிக்கம் முதல் மனைவியை விவாகரத்து செய்து விட்டதாகவும் அதன்பிறகு ஜோதி என்பவரை இரண்டாம் திருமணம் செய்து அவர்களுக்கு சுவாதிகா, பிரியா என்ற குழந்தைகள் பிறந்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அதை மறுத்து Reply statement எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் இறந்து போன ராஜமாணிக்கத்தின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதற்கு காரணம் சொல்லமுடியுமா என்றால் வாரிசு சான்று உள்ளது தாக்கல் செய்ய தவறிவிட்டேன். CRP. PD No. 3063/2016 in IA 773/2012 in OS 160/2009 என்ற சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் நான் ராஜமாணிக்கத்தின் மனைவி ஜோதி என்று குறிப்பிடப்பட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அசல் வழக்கில் உள்ளது போல் தாக்கல் செய்துள்ளனே். அந்த அசல் வழக்கு 160/2009 ஐ தாக்கல் செய்ததே ராஜமாணிக்கம் என்றால் சரி. என்னுடைய வழக்குரையில் பாரா 3 (1) ல் தாவா சொத்து 1ம் வாதியின்

தாயாரும் இரண்டாம் வாதியின் மாமியாரும் 3, 4 வாதிகளின் பாட்டி மீனாட்சியம்மாள் என்பவராலும் இந்த 1ம் வாதியாலும் (என்னாலும்) கடந்த 17.09.1989 தேதியில் கிரயம் பெறப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அதற்கான கிரய பத்திரயம் வாசாஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. வழக்கிற்காக நானும் என் அம்மாவும் சேர்ந்து கிரயம் பெற்றதாக சொல்கிறேன் என்றாலும் அதில் என் அம்மா மீனாட்சி மட்டுமே கிரயம் பெற்றதாகத்தான் வாசகம் உள்ளது என்றால் சரியல்ல. வாங்குபவருக்காக விற்பவருக்கு பக்கிரிசாமி கொடுத்த தொகை பத்தாயிரம் 10,000/- என்ற வாசகம் அந்த கிரயப்பத்திரத்தில் உள்ளது. அந்த பக்கிரிசாமி நான்தான். அந்த கிரயம் என் அம்மா பெயரில் மட்டும் தான் வாங்கப்பட்டதாக உள்ளது என்றாலும் வழக்கிற்காக நானும் சேர்ந்து கிரயம் பெற்றதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன ராஜமாணிக்கத்திற்கு நான் நேரடி வாரிசு இல்லை என்றால் நான் அவர் உடன் பிறந்த தம்பி. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் நான் ராஜமாணிக்கத்தின் வாரிசு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. பிராதில் வாசாஆ 3 ஆவணத்தில் கண்ட சொத்தை நானும் சேர்ந்து அனுபவித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. வாசாஆ 3 ஆவணத்தில்கண்ட சொத்தில் என்ன உள்ளது என்றால் வீடும் கொல்லையும் உள்ளது. அந்த வீட்டின் கதவு எண் 11 ஆ என்றால் ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்து விவரத்தில் கதவு எண் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்ன கதவு நம்பர் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. வாசாஆ 3 ஆவணத்தில் கண்ட சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லியிருப்பதால் அதில் குடியிருப்பதாக அர்த்தமா என்றால் குடியிருக்கவில்லை அந்த வீட்டிற்கு நிறைய பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது அதற்கிடையில் ஒரு வழக்கு வந்து விட்டது அந்த வீட்டை அனுபவித்து வருகிறேன். என் பிராதில் எங்கேயும் வாசாஆ 3 ஆவணத்தில் கண்ட சொத்தை என்ன முறையில் அனுபவித்து வருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் கிரயதாரர் என்ற முறையில் அனுபவித்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன். வாசாஆ 8 ஆவணத்தை (7 வீட்டு வரி ரசீதுகள்) எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லமுடியுமா என்றால் என்னுடைய அனுபவத்தில் அந்த வீடு உள்ளது என்று காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். அந்த ரசீதுகள் அனைத்தும் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி சங்கரன் பெயரில் வழங்கப்பட்ட ரசீதுகள் என்று சொன்னால் மறுக்கமுடியுமா என்றால் அதை ஆட்சேபிக்கிறேன் சட்ட விரோதமாக வாங்கப்பட்டுள்ளது நான் வழக்கிற்காக வாசாஆ 3 ஆவணத்தில் கண்ட வீடு குடியிருக்க

லாயக்கில்லாத வீடு என்று பொய் சொல்கிறேன் என்றாலும் அதில் 1ம் பிரதிவாதி குடியிருந்து அவர் பெயரில் வீட்டு வரி ரசீது மற்றும் மின்கட்டண ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றாலும் அதற்கு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களே சாட்சி என்றால் சரியல்ல. அது சட்ட விரோதமாக வாங்கப்பட்டுள்ளது. வாசாஆ 3ல் கண்ட சொத்து எந்த காலத்திலும் என்னுடைய அனுபவத்திலோ என் தாயாரின் அனுபவித்திலோ இல்லை என்றாலும் அப்படி அனுபவித்திருந்தால் அதை எந்த முறையில் அனுபவித்தேன் என்று வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. சொத்தை அபகரிப்பதற்காக அந்த ஆவணங்கள் மோசடியாக போலி ஆவணங்கள் தயார் செய்து ரசீதுகள் போட்டுள்ளார்கள். தாவா சொத்து வெங்கட்ராம ஐயருக்கு சொந்தமானது என்றால் இல்லை ராஜாமணிக்கு சொந்தமானது. ராஜாமணி வெங்கட்ராம ஐயரின் மகன் என்றால் சரி. தாவா சொத்தை 30.06.1981 ல் மேற்படி வெங்கட்ராம ஐயரின் பவர் ஏஜெண்ட் அருணாச்சல அங்குராயர் என்பவரிடம் 2ம் பிரதிவாதி கணபதி கிரய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றால் அதை நான் மறுக்கிறேன். மேற்படி கிரய ஒப்பந்தத்தின்படி சொத்தை 28.07.1985ல் கணபதி 1ம் பிரதிவாதி சங்கரனிடம் அந்த சொத்தை ஒப்படைத்தார் என்றால் மறுக்கிறேன். வழக்கிற்காகத்தான் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த ஒப்பந்தத்தை மறுக்கிறேன் என்றாலும் ஆனால் அந்த ஆவணத்தை வாசாஆ 6 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வாசாஆ 6 ஆவணமான 28.07.1985 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தான் 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் என்றால் அப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக கிரயதாரர் ராஜாமணி என்னிடம் சொல்லவில்லை. தாவா சொத்து 30.06.1981 முதல் 2ம் பிரதிவாதி வசமும் அதை தொடர்ந்து 28.07.1985 முதல் 1ம் பிரதிவாதி வசமும் இருந்து வருகிறது என்றாலும் அதை என்னால் மறுக்கமுடியுமா என்றால் மறுக்கிறேன். OS 170/1989 என்ற வழக்கை என் அம்மா மீனாட்சியம்மாள் ராஜாமணி பெயரிலும் கணபதி பெயரிலும் தொடர்ந்த வழக்கு அந்த வழக்கில் கணபதி இதுபோல் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. அவர் exparte ஆகி அந்த சொத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டார். OS 170/1989 வழக்கு injunction வழக்கா என்றால் ஆமாம். என்னுடைய பிராதில் அசல் வழக்கு 170/1989 என்ற வழக்கு சொத்தை வசம் கேட்டு போடப்பட்ட வழக்கு என்று சொல்லியிருந்தால் அது பொய்யா என்றால் ஆமாம். அந்த வழக்கு injunction கேட்டு தொடர்ந்த வழக்கு. என்னுடைய பிராதில் 20.11.1989ல் 2ம் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமித்து விட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய

பிராதில் அசல் வழக்கு 170/1989ல் ஏற்பட்ட தீர்ப்பு படி தாவா சொத்தின் வசத்தை 2ம் பிரதிவாதி கணபதி எங்களிடம் ஒப்படைத்து விட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். சொத்தை எங்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். 2ம் பிரதிவாதி கணபதி எந்த தேதியில் ஒப்படைத்தார் என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் தேதி குறிப்பிடவில்லை. அசல் வழக்கு 170/1989 என்ற வழக்கின் தீர்ப்புரை, தீர்ப்பாணை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தை 30.06.1981 லிருந்து 2ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றாலும் அதனால் அந்த சொத்தை என் வசம் ஒப்படைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு 170/1989 என்ற வழக்கில் 1996ல் தீர்ப்பு வழங்கப்பட்டது அதனடிப்படையில் சொத்தின் வசத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டார். வழக்கிற்காகத்தான் தாவா சொத்தை 2ம் பிரதிவாதி என்னிடம் ஒப்படைத்ததாக சொல்கிறேன் என்றாலும் உண்மையில் ஒப்படைத்திருந்தால் அப்படி ஒப்படைத்த தேதியை வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு 170/1989 என்ற வழக்கின் தீர்ப்பை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்யவில்லை. அந்த சொத்தை எங்கள் வசம் ஒப்படைத்து விட்டார். சொத்து எங்கள் வசம் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் அசல் வழக்கு 170/1989 என்ற வழக்கின் தீர்ப்பை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்யவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரி. 2ம் பிரதிவாதி தாவா சொத்தை தானாக ஒப்படைத்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் அதை உறுதி படுத்த எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஆனால் சொத்தின் வசம் எங்களிடம் தான் உள்ளது. வழக்குரையில் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்து எங்கள் வசம் இருப்பதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலம் முதல் இன்று வரை தாவா சொத்து எங்கள் வசம் தான் உள்ளதா என்றால் இன்றைய தேதி வரை என்று சொல்ல முடியாது. 2019ல் கணபதி மகன் சுப்ரமணியன் என்பவர் வழக்கு சொத்தில் உள்ள வீட்டை ஆக்கிரமித்து இடித்து சேதப்படுத்தியிருக்கிறார். இது சம்பந்தமாக காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் 2020ல் புகார் கொடுத்திருக்கிறேன். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி எப்படி அனுபவித்தாரோ அதேபோல தான் 3ம் பிரதிவாதியும் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 2019 வரை எங்கள் வசம் இருந்தது என்று உறுதி படுத்த எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் கிரயப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். தீர்ப்புரை தாக்கல் செய்துள்ளேன். வழக்கிற்காக 3ம் பிரதிவாதி 2019ல் வீட்டை இடித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான்

உண்மையிலேயே அவர் மீது புகார் கொடுத்திருந்தால் அந்த விவரத்தை வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் நகல் தாக்கல் செய்துள்ளேன். வழக்கிற்காக புகார் நகல் தாக்கல் செய்ததாக சொல்கிறேன் என்றாலும் அதுபோல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதி வசம் 28.07.1985 முதல் இருந்ததால் ராஜமாணிக்கத்திற்கு எதிராக சீர்காழி முன்சிப் கோர்டில் அசல் வழக்கு 235/2013 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரி. அது எங்கள் கவனத்திற்கு வரவில்லை. நோட்டீஸ் வரவில்லை. அந்த வழக்கு தாக்கல் செய்தது எங்களுக்கு தெரியாது. மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. சங்கரன் கணபதியின் மருமகன் என்று சாட்சி தாமாக சொல்கிறார். எனக்கு தெரியாத வழக்கை பற்றி வழக்குரையில் சொல்லியிருந்தால் தவறு என்றால் அந்த வழக்கை பற்றி தெரியவந்தபிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எந்த தேதியில் அசல் வழக்கு 235/2013 என்ற வழக்கு பற்றி தெரியவந்தது என்றால் 2020 ல் தெரியவந்தது. தேதி மாதம் நினைவில்லை. எங்களுக்கு சொந்தமான சொத்தை அவர் இடித்தபோது தான் ஏன் அவர் இடிக்கிறார் என்று பார்த்தோம். அதன்பிறகு கோர்ட் மூலமாக தெரிந்து கொண்டோம். வாசாஆ 10 ஆவணம் அசல் வழக்கு 235/2013 என்ற வழக்கின் தீர்ப்புரை என்றால் சரி. இந்த தீர்ப்பு செல்லாது என்று வழக்குரையில் பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. என்னுடைய வக்கீல் பெயர் , கல்யாணம் ஆன தேதி, என் மனைவி பெயர், என் மகன் பிறந்த தேதி, ஞாபகம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. நான் 25 வருடமாக நாட்டு வைத்தியம் பார்க்கிறேன். என்னிடம் வைத்தியம் பார்க்க வரும் நோயாளிகளுக்கு மருந்தை புத்தகத்தை பார்த்து சொல்வேனா அல்லது ஞாபகத்திலிருந்து வைத்தியம் பார்ப்பேனா என்றால் புத்தகத்தை பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. நல்லெண்ணெய் தான் மருந்து. ஞாபகத்திலிருந்து தான் செய்வேன். என்னிடம் வரும் நோயாளிகள் அனைவருக்கும் ஒரே நல்லெண்ணெய் தான் மருந்தா என்றால் ஆமாம். வாசாஆ 10 ஆவணத்தின் தீர்ப்பு 16.09.2016 ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் அந்த வழக்கை பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. பின்னிட்டு தான் தெரியவந்தது. அந்த வழக்கின் தீர்ப்பு செல்லாது என்று பரிகாரம் அந்த தீர்ப்பு தேதியிலிருந்து 3 வருடகாலத்திற்குள் கோர வேண்டுமென்பதால் அந்த தீர்ப்பு பற்றி எதுவும் தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு எங்களுக்கு தெரியவரவில்லை. காலாவதியை மறைப்பதற்காகத்தான் அந்த வழக்கு பற்றி இப்போது தான் தெரியவந்ததாக பொய்யா சொல்கிறேன்

என்றால் சரியல்ல. மேற்படி தீர்ப்பை (வாசாஆ 10 ஆவணம்) அனுசரித்து 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியிடம் சொத்தை விற்று விட்டார் என்றால் சரியல்ல. அவர்கள் விற்றதெல்லாம் எனக்கு தெரியாது. பிராதில் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியிடம் சொத்தை விற்று விட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சாட்சி மீண்டும் ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். வாசாஆ 11 சொத்து விவரத்தில் விஸ்தீரணம் 7 1/2 ஏர்ஸ் சமமான 18 1/2 சென்ட் என்று போடப்பட்டுள்ளது என்றால் அது யார் வாங்கியது என்று தெரியவில்லை. 30 சென்ட் இடத்தில் 17 சென்டை மட்டும் காண்பிக்கிறார்கள் அதுவே தவறு. தாவா புல எண்ணை பொறுத்து பூமியில் என்ன உள்ளதோ அதை தான் 1ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி வாசாஆ 11 ஆவணம் மூலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் கிரயம் வாங்கிய 30 சென்டுக்கு உட்பட்டதுதான் அந்த விஸ்தீரணம். வாசாஆ 11ல் கண்ட சொத்து 1981முதல் 2ம் பிரதிவாதி வசமும் அதை தொடர்ந்து 1985 முதல் 1ம் பிரதிவாதி வசமும் இருந்து வருவதனால் தாவாவில் நான் கேட்ட 1 முதல் 4 பரிகாரங்கள் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாவா சொத்தை 20.11.1989ல் ஆக்கிரமித்து விட்டார் என்று சொல்லிவிட்டு அதற்கு முரணாக தாவா சொத்தை நாங்கள் வசம் எடுத்திருப்பதாக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 11 ல் கண்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் அதை பற்றி நான் என்ன சொல்கிறேன் என்றால் ஒரு தலைபட்ச தீர்ப்பாணையை வைத்து பட்டா கொடுத்ததே தவறு. அதனால் தான் தாசில்தார் மீது வழக்கு போட்டிருக்கிறோம். 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் வழக்கின் அடிப்படையில் தீர்வு காண வேண்டிய சொத்து என்பதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏற்கனவே வட்டாட்சியரை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 28.07.1985 முதல் வாசாஆ 11ல் கண்ட சொத்தானது 1ம் பிரதிவாதியின் வசம் இருந்துவருவதால் தான் வட்டாட்சியர் அவர் பெயரில் பட்டா வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. கிரய ஆவணமே இல்லாமல் 1985ல் பட்டா மாறுதல் பெற்றுள்ளார். ராஜமாணிக்கம் தாவா சொத்தை (வாசாஆ 4 ஆவணத்தின் அடிப்படையில்) 05.11.1990ல் தன் வசம் எடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் எந்த காலத்திலும் தாவா சொத்தின் வசத்தை ராஜமாணிக்கம் எடுத்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ராஜமாணிக்கத்தின் வசம் இல்லாததால்தான் அவர் அசல் வழக்கு 170/89 என்ற வழக்கு தொடர்ந்தார் என்றாலும் மேற்படி வழக்கிலும் அவருக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்படாததால் அந்த தீர்ப்புரையை இந்த வழக்கில்

ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு ராஜமாணிக்கத்தின் வாரிசாக நான் வராததாலும் அவசியமான தரப்பினரான இரண்டாம் மனைவி ஜோதி மற்றும் அவரது மகள்களை இந்த வழக்கில் சேர்க்காததாலும் அவசியமற்ற தரப்பினரான என்னை சேர்த்திருப்பதால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஜோதி இரண்டாம் மனைவி இல்லை. அவரது மகள்கள் மற்றும் ஜோதி வழக்கிற்கு அவசியமான தரப்பினரும் இல்லை. 3ம் பிரதிவாதியும் அவரது முன்னோர்களும் 30.06.1981ல் ஏற்பட்ட கிரயஒப்பந்த அடிப்படையில் முழுத்தொகையும் கொடுத்து சொத்தை வசம் எடுத்து அனுபவித்து வருவதால் வாதியாகிய நாங்கள் சொத்தை வசம் எடுக்கும் உரிமையை இழந்துவிட்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக பட்டா எதுவும் பெறவில்லை என்றாலும் அதனால் 4முதல் 6 பிரதிவாதிகள் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. வாசாஆ 15 ஆவணம் குறித்து பிரதிவாதிகள் பதில் கொடுக்க போதிய அவகாசம் இல்லாததால் அவர்களால் பதில் கொடுக்க இயலவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 17 மூலம் 3ம் பிரதிவாதிக்கு மட்டும் தான் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அனைவருக்கும் அறிவிப்பு கொடுத்துள்ளோம். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் என் கட்சியை உறுதிபடுத்த கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. பல உண்மை சங்கதிகளை மறைத்துள்ளதாலும் தூய கரத்துடன் வழக்கை தாக்கல் செய்யாததாலும் நான் கோரிய எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் எனது வழக்கிற்கு விரோதமாக அமைந்து விடும் என்பதால் பல கேள்விகளுக்கு ஞாபகம் இல்லை என்று பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் கிரயதாரர் பொய் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி என்றால் சரி. இவ்வழக்கின் 4, 5, 6 பிரதிவாதிகள் அரசு ஊழியர்கள் என்றால் சரி. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு ஏதாவது அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். இவ்வழக்கின் என் கட்சி பத்திர பதிவு செய்தது தவறு என்பது என்றால் இல்லை. பட்டா மாற்றியதும் தவறு என்று கூறுகிறேன். ஒரு அரசு ஊழியர் அவரது பணியினை செய்யக்கூடாது என்று தடை உத்தரவு போடமுடியாது என்றால் சரி. சரியான ஆவணங்களை பரிசீலிக்காமல் கிரயபத்திரத்தை பதிவு செய்தது தவறு என்று கூறுகிறேன். நான்

பிராதில் கூறியுள்ளபடி 4 முதல் 6 பிரதிவாதிகள் எந்த சட்ட முரணான செயலும் செய்யவில்லை என்றாலும் சட்டப்படியான செயல்கள்தான் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பத்திரப்பதிவை Exparte தீர்ப்பின் அடிப்படையில் செய்துள்ளார்கள். வாரிசு சான்றிதழோ மூலபத்திரமோ பார்வையிடாமல் பத்திரபதிவு செய்துள்ளார்கள். 4 முதல் 6 பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணங்களை சரிவர பரிசீலிக்காமல் பத்திர பதிவு செய்தது தவறு என்றும் பட்டா மாறுதல் செய்தது தவறு என்றும் அதனால் நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் எனக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தான் தனிப்பட்ட பிரச்சனை என்றால் சரி. வருவாய் ஆவணத்தில் எதுவும் தவறு உள்ளதா என்றால் உள்ளது. நான் வழக்கில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மையென்றால் வருவாய் கோட்டாட்சியர் முன்பு வருவாய் சட்டத்திற்குட்பட்டு மேல்முறையீடு செய்யவேண்டுமென்றால் சரியல்ல. சரியான ஆவணங்களை பரிசீலிக்காமல் வருவாய் துறையினர் பட்டா சிட்டா மாற்றியுள்ளனர். வருவாய் துறையிலிருந்து தான் தவறு ஆரம்பித்திருக்கிறது. இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி சட்டத்திற்குட்பட்டுதான் சரியான முறையில் பத்திரப்பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சட்டத்திற்குட்பட்டு பட்டா மாறுதல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் மீது தலா 2 லட்சம் நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. பதிவுத்துறை பட்டா சிட்டா அடங்கல் பரிசீலிக்காமல் பத்திரம் பதிவு செய்துள்ளார்கள். அதற்கு வருவாய் துறையும் உடந்தையாக இருந்திருக்கிறது. பட்டா சிட்டா ரத்து செய்வதற்கு கோட்டாட்சியரிடம் தான் மேல் முறையீடு செய்யவேண்டுமென்றாலும் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. நான் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அரசு இயந்திரம் சரியாக இயங்கியிருந்தால் இந்த பதிவு நடந்திருக்காது. வழக்கும் ஏற்பட்டிருக்காது. கோட்டாட்சியரிடம் எந்த மனுவும் கொடுக்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரச்சனை ஏற்படுத்தியது வருவாய் துறை என்பதால் நான் நீதிமன்றத்தை அனுகியுள்ளேன்.